OMA
Ontario Medical Association

# சமூக தகவல் அறிக்கை

ஜூலை, 2020

## தொடர்புகளைக் கண்காணித்தல் மீண்டும் திறக்கவும் பாதுகாப்பாக இருக்கவும் எங்களுக்கு உதவுகிறது




### தொடர்புகளைக் கண்காணித்தல் என்றால் என்ன?

தொடர்புகளைக் கண்காணித்தல் என்பது உறுதிபடுத்தப்பட்ட COVID-19 நபர்களுடன் தொடர்பில் இருந்தவர்களைப் பொது சுகாதார அதிகாரிகள் கண்காணித்து அவர்களைச் சோதித்து சுய-தனிமைப்படுத்துவதாகும்.

தொடர்பில் இருந்தவர்களைக் கண்காணித்தல் மூலமாக COVID-19 உள்ளவர்களை விரைவாகக் கண்டறிந்து அவர்களை தனிமைப்படுத்துவது Ontario ஐ மீண்டும் பாதுகாப்பாகத் திறந்து வைரஸ் பரவுவதைக் குறைக்க அவசியமாகும்.

தொடர்புகளைக் கண்காணித்தலை ஆதரிப்பதே நீங்கள் எங்களுக்கு உதவிக்கூடிய எளிய ஆனால் முக்கிய வழியாகும். அதாவது தொடர்புகளைக் கண்காணித்தல் செயலியைப் பயன்படுத்தி நீங்கள் சமூக ரீதியாக அல்லது கடை அல்லது தெரு போன்ற பொது இடங்களில் நெருக்கமாகத் தொடர்பு கொள்பவர்களைக் கண்காணிப்பதாகும்.

### தொடர்புகளைக் கண்காணித்தல் செயலியைப் பயன்படுத்துவது எளிதாகும்

Ontario -இன் மொபைல் செயலியான COVID Alert ஆனது COVID-19 க்கு வெளிப்படுத்தப்பட்டவர்களுக்கு வேகமான, பாதுகாப்பான, மற்றும் தனியுரிமை பாதுகாக்கப்பட்ட வழியை வழங்குகிறது.

செயலியானது ப்ளூடூத் பயன்படுத்தி அருகிலுள்ள மற்ற செயலி பயனர்களுடன் அநாமதேயமான, தற்போக்காக உருவாக்கப்பட்ட குறியீடுகளை பகிர்கிறது.

உங்களுக்கு COVID-19 இருந்தால், கடந்த 14 நாட்களில் உங்கள் அருகில் இருந்தவர்களுக்கு நீங்கள் அநாமதேயமாகத் தெரிவிக்கலாம்.

கடந்த 14 நாட்களில் மற்றொரு செயலி பயனர் மூலம் உங்களுக்கு COVID-19 தொற்று ஏற்பட்டால், நீங்கள் ஓர் அநாமதேய அறிவிப்பைப் பெறுவீர்கள்.

**செயலி:**

- தனிப்பட்ட தரவு அல்லது தனிப்பட்ட சுகாதார தகவலைச்சேகரிப்பதில்லை
- GPS இடத் தரவைச் சேகரிக்கவோ அல்லது கண்காணிக்கவோஇல்லை
- 14 நாட்களுக்குப் பிறகு அனைத்து அநாமதேய தகவலையும் தானாகவே அழித்துவிடுகிறது
- Android சாதனங்கள் மற்றும் iPhone களில் பயன்படுத்தலாம்
- Ontario க்கு வெளியே மற்ற ஒத்த செயலிகளுடன் வேலை செய்கிறது



### செயலியைப் பயன்படுத்துவதில்லையா அல்லது பயன்படுத்த முடியவில்லையா? உங்கள் தொடர்புகளைக் கண்காணிக்க குறைந்த தொழில்நுட்ப, சார்ந்த வழிகளும் உள்ளன

நீங்கள் செல்லும் இடங்களில் புகைப்படம் எடுத்தோ அல்லது OMA **இன் பாக்கெட் டைரி போன்று மின்னணு வாயிலாக அல்லது காகித்தில் குறிப்புகளை எடுத்தோ உங்கள் தொடர்புகளைக் கண்காணிக்கலாம்**.

- நீங்கள் எங்கு எப்போது சென்றீர்கள், யாரைச் சந்தித்தீர்கள் என்பதைப் பதிவு செய்யலாம்.
- 15 நிமிடங்கள் அல்லது இரண்டு மீட்டர்கள் (ஆறு அடி) குறைவான தொலைவில் இருந்தவர்களின் பெயரைப் பட்டியலிடலாம்.
- நபரின் பெயர் தெரியவில்லை என்றால், *“ZZ* தேதியன்று *YY* நேரத்தில் *XX* கடையில் உற்பத்தி துறையில் ஊழியருடன் நீண்ட நேரம் பேசினேன் ” போன்ற தகவலைப் பதிவு செய்யலாம்.